## உமாமகேஸ்வரனும் (முகுந்தன்) அவருடைய சமூகவிரோதக் கும்பலும்

1974ல் புதிய தமிழ்ப் புலிகள் (டி.என்.டி) என்னும் அமைப்பாக உருவாகி, 1976-மே 5ம் நாள் - தமிழீழ விடுதலைப் புலிகளாகப் புனரமைக்கப் பட்ட இயக்கத்தில் 1977ல் இயக்க விதிகள், கட்டுப்பாடுகளுக்கு அமைய நடப்பேன் என உறுதியளித்த, முகுந்தன் சேர்ந்தார். இரண்டு ஆண்டுகள் மட்டுமே இயக்கத்தில் இருந்த அவர், 1979ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இயக்கக் கட்டுப்பாட்டை மீறியதன் காரணமாக மத்திய செயற்குழுவால் ஏகமனதாகப் பதவி இறக்கப்பட்டார். பதவி இறக்கப்பட்டதைப் பொறுக்க முடியாத முகுந்தன், வெளியார் விமர் சனங்களுக்குப் பயந்து இயக்கத்தை விட்டு விலகிச் சென்றார். அப்போது இயக்கத்தில் உள்ள ஒரு உறுப்பினர்கூட அவரது நடவடிக்கைகளை ஆதரிக்கவும் இல்லை. அவருடன் செல்லவுமில்லை.

இயக்க விதிகளின் படி "இயக்க உறுப்பினர்கள் இயக்கத்தைவிட்டு விலகிச் செல்ல முடியாது. இயக்கத்தைவிட்டு விலக்கப்பட்டால்கூட, மாறாக வேறொரு இயக்கம் தொடங்கவோ, வேறு இயக்கத்தில் சேரவோ கூடாது. சேர்ந்தால் அவரது உயிர் பறிக்கப்படும்". இந்த விதிகளை ஏற்றே முகுந்தன் இயக்கத்தில் சேர்ந்தார்.

அவராக தனி மனிதராக இயக்கத்தை விட்டுச் சென்ற தனி இயக்கம் தொடங்கும் முயற்சியில் ஈடுபட்டார். அக்கால கட்டத்தில் எமது இயக்கத்தைச் சிங்கள அரசுக்குக் காட்டிக் கொடுக்கும் முயற்சியில் இறங்கினார். சிங்கள வெறிபிடித்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கும், இனப்படுகொலையை நடத்திய ஐ.பி.அறசெகிரட்ணாவுக்கும் இயக்கம் பற்றிய சில தகவல்களை அளித்தார். அத்தோடு இயக்கத்தை விட்டுப் பல்வேறு காரணங்களுக்காக, பல்வேறு காலங்களில் விலக்கப்பட்டவர்கள், விலகிச் சென்றவர்களை (இயக்கத்தில் இருந்த வேளையில் இவர்கள் எல்லாம் முகுந்தன் செயலை எதிர்த்தவர்கள்) எல்லாம் ஒருகுழுவாகத் திரட்டி, தமிழீழத்துரோக சமூக விரோதிகளையும்சேர்த்து - இயக்கத்தில் சேர்ந்ததற்கான அடிப்படை இலட்சியங்களையே மறந்து - எமது இயக்கத்தை ஒழிப்பதொன்றே இலட்சியமாகக் கொண்டு ஒரு குழுவை நடாத்தி வந்தார்.

இந்தக் குழுவினைச் சேர்ந்த சுந்தரம் என்ற சிவசண்முகமூர்த்தி 1977-ல் முகுந்தனால் இயக்கத்துக்கு அறிமுகமாகி இயக்கத்தில் சேர்ந்தார். முகுந்தனை இயக்க மத்திய செயற்குழு பதவி இறக்கிய வேளையில் மத்திய செயற்குழுவிற்கு உதவியாகச் செயலாற்றியவர். அவ்வேளையில் முகுந்தனின் செயல்களை எதிர்த்து வந்தவர். இயக்க ஆயுதங்களைக் கொண்டு, இயக்க பயிற்றுநர்களால் பயிற்சி பெற்றவர், பின் இயக்க ஆயுதங்களை அபகரித்துக் கொண்டோட ஒரு சிலருடன் கூடிச் சதி செய்து, அச்சதி அம்பலமாகவே அகப்பட்ட ஆயுதங்களையும், பணத்தையும் எடுத்துக்கொண்டு ஓடிவிட்டுப் பின்னர் இயக்கத்தைப் பிடிக்கவில்லை என்று விலகல் கடிதம் அனுப்பினார். அத்துடன், இயக்கத்தின் இரகசியத் தளங்களை (பண்ணைகளை) அம்பலப்படுத்தும் முயற்சியிலும் பகிரங்கமாக இறங்கினார். இந்த நிலையில், இயக்கத்துக்கு எதிராகச் செயற்பட்ட சுந்தரத்தை இயக்கத்தால் விலக்கப்பட்ட முகுந்தன் தன்னுடன் சேர்த்துக் கொண்டு, அவருக்கு "தளபதி" பட்டம் சூட்டி இயக்கத்துக்கு எதிராக அணிதிரட்டினார்.

இந்த நிலையில் இயக்க விதிகளுக்கு மாறாக

1. இயக்கத்தை விட்டு விலகியது,
2. இயக்க ஆயுதங்களைக் களவாடியது,
3. இயக்கப் பணத்தைக் களவாடியது,
4. இயக்க இரகசியங்களைப் பகிரங்கமாக அம்பலப்படுத்தியது,
5. இயக்கத்தை அழிக்க அணிதிரட்டிச் செயற்பட்டமை, ஆகிய குற்றங்களுக்காகச் சுந்தரம், இயக்கத்தினால், இயக்க விதிகளின்படி தண்டிக்கப்பட்டார்.

ஆனால் முகுந்தன், தன் சகாவான சுந்தரத்தின் துரோகத்தனத்தை நியாயப்படுத்துவதற்காக, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தூண்டுதலின் பேரிலேயே, பிரபாகரன் சுந்தரத்தைத் தண்டித்ததாகப் பொய்ப் பிரச்சாரத்தை முடுக்கிவிட்டுள்ளார். உண்மையில் வேறொருவர் தூண்டுதலின்படி இயங்கவேண்டிய அளவுக்கு அரசியல் அறிவு, அனுபவம், ஆற்றல் இவை குன்றிய நிலையில் எமது இயக்கம் இருக்கவில்லை. தொடங்கிய நாளில் இருந்து இயக்கத்தவர்களின் சொந்த அறிவு, ஆற்றல், செயற்பாடு இவைகளை வைத்தே இயக்கம் வளர்ந்து வந்திருக்கிறது. தவிர இலக்கு நோக்கிய இயக்கத்தின் பாதையும், கூட்டணியின் பாதையிலிருந்து முற்றாக மாறுபட்டதாகும். இந்நிலையில் கூட்டணியின் ஆலோசனையின் பேரில் நாம் செயற்படுவதாகக் கூறுவது அப்பட்டமான பொய்யாகும்.

சிங்கள அரசுக்கு எதிராக ஒருசில நடவடிக்கைகளை நடாத்திய போதிலும், முகுந்தனது கும்பல் நாட்டில் பல சமூகவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு விடுதலை இயக்கத்துக்கு எதிராக மக்கள் மனம் திரும்பும் வண்ணம், விடுதலை இயக்கத்தை மக்கள் வெறுக்கும் வண்ணம் செயற்பட்டது. இயக்கத்தை அழிக்க முகுந்தன் பகிரங்கமாகச் செயற்பட்டார்.

இந்நிலையில் தமிழீழ விடுதலைக்கெனப் புறப்பட்ட எமது இயக்கம், 35 லட்சம் மக்கள் நலனையும் பொறுப்பேற்க வேண்டிய எமது இயக்கம் எம்மால் சேர்க்கப்பட்டு, பயிற்சியளிக்கப்பட்டு ஆயுதப் போராளிகளாக உருவாக்கப்பட்டவர்கள் சமூக விரோதச் செயலில் தலைமையேற்று ஈடுபடுவதையும், இயக்கத்தை அழிக்கும் செயலில் சவால் விட்டு இறங்குவதையும் பார்த்துக்கொண்டு இருப்பது என்பது, மக்களுக்கு நாம் செய்யும் துரோகம் ஆகும். எனவே, அந்த சமூக விரோத சக்திகளை மக்களுக்கு அம்பலப்படுத்தி, அழித்தொழிப்பது எமது தலையாய கடமையாகும்.

<u>சமூக விரோதிகளின் அழிவுப்பாதை</u>

தனது சுயபலவீனங்களையும், தவறுகளையும் மறைப்பதற்காக இராணுவக் கட்டுப்பாடான இயக்கத்துக்கு எதிராகப் பல்வேறு காலங்களில், பல்வேறு காரணங்களுக்காக, இயக்கத்தில் இருந்து விலக்கப்பட்ட ஒருசிலரையும், நாட்டில் உள்ள இலட்சியமற்ற சமூக விரோதிகளையும், உலக அனுபவமறியா அப்பாவி இளைஞர்களையும் மாற்றிச் சேர்த்து கட்டுப்பாடற்ற குழுவாக இயக்கி வந்தார் முகுந்தன்.

அவர்கள் சிங்கள அரசுக்கெதிராக ஒருசில நிகழ்ச்சிகளை நிகழ்த்திய போதிலும், இலட்சியமற்ற சமூக விரோதிகளை பெரும்பான்மையாகக் கொண்ட குழுவானதால் அவர்களது பழக்கதோசம், அவர்களைப் பழைய பாதையை நோக்கித் திருப்பியதால் அவர்களது குழு அழிவுப்பாதையை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது.

<u>அழிவை நோக்கி ஐக்குழுவின் நிகழ்வுகள்</u>

1) 2.10.81ல் மன்னார் வேயன்குளத்தைச் சேர்ந்த ஏழை விவசாயி ரஹுமான், ரபீக் ஆகிய இருவரும் புநகரியிலுள்ள செம்மண்குன்று என்னும் இடத்திற்கு மாடு வாங்குவதற்குக் கொண்டு சென்ற ரூ. 5850/-ஐ முகுந்தனின் கொள்ளைக் கூட்டத்தினர் அபகரித்துச் சென்றனர். ஏழை விவசாயிகள் தமது தொழிலுக்கு முதலாக வைத்திருந்த பணத்தைப் பறி கொடுத்ததினால் பெரும் கஷ்டத்திற்குள்ளாயினர்.

2) பின்னர் பருத்தித்துறை கற்கோவளத்தைச் சேர்ந்த டாக்டர் அருளானந்தம் வீட்டில் 4லட்சு ரூபாய் நகைகளைக் கொள்ளையிட்டனர், உடுவக்கரை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணத்தைக் கொள்ளையிட்டனர். பரந்தன் ரயில் நிலையத்தில் கொள்ளையிட்டனர். வேலணை பேருந்தில் சென்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் காசாளரிடமிருந்து ரூ.69,000/-ஐக் கொள்ளையிட்டனர். 22.1.82ல் புத்தூர் நவக்கிரிக் [illegible] இளைய தம்பி வேலுப்பிள்ளை என்பவரது வீட்டில் நகைகளையும், பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றனர். புத்தூர்க் கொள்ளை சம்பந்தமாக மக்களே முன்நின்று தகவல் தந்து இந்தச் சமூக விரோதக் கும்பலைப் போலிசார் பிடிப்பதற்குத் துணைபுரிந்தார்கள். போலிசார் அவர்களில் மூவரைக் கைது செய்யும் வேளை புத்தூர் வீட்டில் களவாடிச் சென்ற நகைகளை உருக்கிய நிலையில் கைப்பற்றினர். அத்துடன் முகுந்தன் கையெழுத்துடன் நாமே நடத்தியது என்று தம்பட்டமிட்டுத் துண்டறிக்கையில் உரிமைகோரிய நாச்சியார் கோவில் கொலை ஆனைக்கோட்டைச் சம்பவம் இவற்றில் பொலிசாரிடமிருந்து பறித்துச் சென்ற ஆயுதங்களும் போலிசாரிடம் அதே வீட்டில் சிக்கின. <u>இதனால் இந்தச் சமூக விரோதக் கும்பல் முற்று முழுதாக மக்களுக்கு அடையாளம் காட்டப்பட்டனர்.</u>

3) இந்தக் கும்பல் குழுவாகச் சேருவதற்கு முன்னர் தமது தொழிலாக, வழிப்பறி, கொள்ளை, போன்றவற்றைச் செய்து வந்தவர்கள். பழக்க தோசம் காரணமாக அத்தொழிலைக் கைவிடவில்லை. 15.3.82ல் காங்கேசன் துறைச் சீமெந்துத் தொழிற்சாலை மூன்றாம் கட்ட வேலைத் தள தற்காலிக நாட்கூலித் தொழிலாளர்களின் சம்பளப்பணத்தை (6,80,000) ரப்பாக்கி முனையில் கொள்ளையிட முயன்றனர். ஏழைத் தொழிலாளர் பணத்தைக் கொள்ளையிட முயன்றதைக் கண்டு கொதித்தெழுந்த பொதுமக்கள் அவர்களில் இருவரைப்பிடித்துப் போலிசாரிடம் ஒப்படைத்தனர். அவர்கள் பருத்தித்துறை தும்பளை சின்னத்துரை அருந்தவராசா, வேலணையைச் சேர்ந்த காசிப்பிள்ளை சுரேஸ் குமார் என்போராவர். இவர்கள் கொடுத்த தகவல்களிலிருந்து கற்கோவளம் டாக்டர் வீட்டு நகைக் கொள்ளை, இராணுவத்தினரைக் கொலை செய்து எஸ்.எல்.ஆர் ரப்பாக்கிகளை எடுத்த சம்பவம் இவற்றைச் செய்தவர்கள் இவர்கள் என்பது அம்பலமாயிற்று. இயக்க கட்டுப்பாடோ இலட்சியப் பற்றோ அற்ற இக்கும்பல் எதிரிகளிடம் பிடிபட்டதும் சித்திரவதைக்கஞ்சித் தங்களுக்குத் தெரிந்தவர்கள் பெயர்களை எல்லாம் சொல்லிக்கொடுத்தது.

4) இவர்களுக்கு உதவி செய்த நகைக் கடைக்காரர்களையும் காட்டிக் கொடுத்தனர்.

அத்துடன் எமது இயக்கம் பற்றி முகுந்தனும் சொல்லிக் கேள்விப்பட்ட வாய்மூலத் தகவல்களையும் போலீசாரிடம் அம்பலப்படுத்தி எமது இயக்கத் தோழர்களுக்குப் பெரும் இன்னல்களை விளைவித்தார். இப்படியாக அவர்களாகவே அழிவுப் பாதையை நோக்கிச் சென்று இதுவரை 50க்கும் அதிகமானோர் காராக்கிரகத்தில் அடைபட்டுள்ளனர்.

5) இயக்கக் கட்டுப்பாடுகளை மீறி எம்மிடமிருந்து ஆயுதங்களை அபகரித்துச் சென்றதுடன், எம் இயக்க இரகசியங்களைப் பகிரங்கமாக அம்பலப்படுத்தியதால், எம்மால் அழிக்கப்பட்டார் சுந்தரம். அதை எதிர்த்து ஊமைக் கடிதம், மொட்டைக் கடிதம், எழுதிய உமாமகேஸ்வரன் என்ற முகுந்தனின் கும்பல், ஆயுதம் என்றால் என்ன என்று தெரியாத அப்பாவி இளைஞர்களான இறைகுமாரன் என்னும் அமைதிவழிப் போரில் நம்பிக்கை கொண்ட இளைஞர் உட்பட இரு இளைஞர்களை இயந்திரத் துப்பாக்கியால் சுட்டு வயல் வெளியில் வீசிச் சென்றனர். இந்தப் பாதகச் செயலைப் பொறுத்த பொதுமக்கள் இவர்களைப் பிடிக்கப் போலீசாருக்குத் தகவல் தந்ததைத் தொடர்ந்து உமாவின் வலது கரமான இந்திரன் என்பவர் கைதானார். இவர் கொடுத்த தகவல்களை அடுத்து அவரது கும்பலைச் சேர்ந்த மேலும் பலர் கைதானனர்.

<u>விடுதலை இயக்கம் எது? மக்களே தீர்மானியுங்கள்!</u>

பள்ளிப் படிப்பை முடித்ததும் விடுதலை வேட்கையால் விடுதலைப் போருக்கு ஆயுதப் போராட்டமே ஒரே வழி என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து, தொடக்க காலத்தில் தனித்து நின்றே பல செயல்களைப் புரிந்து, பின்னர் புலிப்படையை அமைத்து கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாகப் போலீசாரின் பலத்த வேட்டைக்கு மத்தியில் தளத்தில் நின்று களத்தில் எல்லாம் நேரடியாக இறங்கிப் பணிபுரிந்து வருவதோடு, தவறு செய்த இயக்க உறுப்பினர்களில் கண்டிக்க வேண்டியவர்களைக் கண்டித்து, தண்டிக்க வேண்டியவர்களைத் தண்டித்து இயக்கம் தொடங்கிய காலம் தொட்டு இயக்கத்தை இராணுவக் கட்டுப்பாட்டோடு நடத்தி இன்றுவரை எந்த ஒரு உறுப்பினரையும் போலீசாரிடம் பிடிபடாமல் பாதுகாத்துவரும் <u>பிரபாகரனின் தமிழீழ விடுதலைப் புலிகள் விடுதலை இயக்கமா?</u> அன்றி,

மேற்படிப்பையும் முடித்து அரசு வேலையில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றி (பென்சன்) ஓய்வு பெற்றுவிட்டு, வெளிநாட்டுக்கு வேலை தேடிச் செல்ல பாஸ்போர்ட் எடுத்து வைத்திருந்த வேளையில் எமது இயக்க உறுப்பினரொருவரின் ஏமாற்றுதலின் பேரில் ( 34 வயதுக்குப் பின்) இயக்கத்தில் சேர்ந்து இரு ஆண்டுகள் கூட இயக்கத்தில் கட்டுப்பாடுகளுக்குள் அடங்கி நடக்க முடியாது நெறி கெட்டு ஓடி, சமூக விரோதிகளையும், இயக்கத்தைவிட்டு ஓடியவர்களையும், வைத்து அரசியல் பாடத்தை அரை குறையாகக் கற்று மாவோ பாதையில் செல்வதாகக் கூறி, பொது எதிரியை மறந்து எம்மை எதிர்ப்பதையே இலட்சியமாகக் கொண்டு செயற்பட்டு, 50க்கும் அதிகமானோரை சிறைக்குள் அனுப்பிவிட்டுத் தனிமரமாக நிற்கும் முகுந்தனின் குழு விடுதலை இயக்கமா? என்பதை மக்களே தீர்மானியுங்கள்

அரசியற் பிரிவு,
தமிழீழ விடுதலைப்புலிகள்